## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No.122/2021**

திரு.பாலசுப்பிரமணியம் (D.W –1) **19.02.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் விவசாயம் பார்த்து வருகிறேன். வாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் அருகில் வசித்து வருகிறார். தாவா சொத்து வாதி பெயரில் உள்ளது என்றால் சரி. வாதி என்னிடம் ரூ.3,50,000/– கடன் பெற்று இருக்கிறார் என்றால் ஆமாம். அதற்காக வாதி என் பெயரில் அடமான கடன் ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால் சரி. அதன் அடமான கடன் பத்திரம் மற்றும் தாவா சொத்தில் அசல் உரிமை ஆவணம் என்னிடம் தான் உள்ளது என்றால் சரி. அடமான கடன் பத்திரத்தில் கடன் தொகைக்கு நூற்றுக்கு வட்டியாக ரூ.1.50 செலுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

2. கடன் தொகையை 15 மாதத்திற்குள் வாதி திருப்பி செலுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். கடன் தொகை மற்றும் வட்டியை வாதி திருப்பிச் செலுத்தும் படி நான் 02.12.2020 ஆம் தேதி பி.வா.சா.ஆ–2 வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினேன் என்றால் ஆமாம். எத்தனை மாதங்கள் வாதி வட்டி எனக்கு கடன் தொகைக்காக செலுத்தினார் என்றால் வட்டி செலுத்தவில்லை. வாதி எனக்கு பி.வா.சா.ஆ–4 பதில் அறிவிப்பை அனுப்பி உள்ளார் என்றால் ஆமாம். பதில் அறிவிப்பில் கடன் அடமான பத்திரத்தின்படி கடன் தொகைக்கு நூற்றுக்கு ரூ.1.50 வட்டி செலுத்த வேண்டும் ஆனால் 100 ரூ.3 நூற்றுக்கு செலுத்த வேண்டும் என்று நான் சொன்னதாக சொல்லி உள்ளார் என்றால் சரி. ஆனால் நான் அப்படி கேட்கவில்லை.

3. பி.வா.சா.ஆ-4 ல் வாதி அசல் தொகையான ரூ.3,50,000/- வட்டி 100 க்கு ரூ.3 விதம் ரூ.10,500/- வட்டி சேர்த்து ரூ.3,60,500/- கொடுக்க தயாராக இருப்பதாக சொல்லி உள்ளார் என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது. அறிவிப்பு அனுப்பிய பிறகு நான் கடன் தொகையை வசூல் செய்வதற்காக தகுதி வாய்ந்த உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். வாதி தான் அடமான கடனை தீர்த்துக் கொள்வதாக இந்த தாவாவை தாக்கல் செய்தார் என்றால் சரி.

4. பதில் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ளவாறு அடமான கடன் தொகையான ரூ.3,50,000/- வட்டி ரூ.10,500/- ஆயிரம் சேர்த்து மொத்தம் ரூ.3,60,500/- த்தை செலுத்தி விட்டார் என்றால் தவறு. அசல் கடன் தொகை மட்டும் செலுத்தியுள்ளார். முதல் விசாரணை வாக்குமூல சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் ஆமாம். அதில் நான் வாதியிடம் இருந்து ரூ.3,60,500/- பெற்றுக்கொண்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. வட்டி ரூ.10,500/- 100 க்கு ரூ.3 ரூபாய் என்று கணக்கிட்டு தான் வாதி செலுத்தியுள்ளார் என்றால் தவறு. ரூ.100 க்கு ரூ.3 ரூபாய் என்று அசல் கடன் தொகைக்கு கணக்கிட்டு மாதம் வாதி வட்டியாக ரூ.5250 செலுத்த வேண்டும் என்றால் சரி. தாவா சொத்து எங்கு உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். அதன் மதிப்பு தெரியுமா என்றால் தெரியாது.

5. கடன் தொகைக்கு நூற்றுக்கு நூறு ரூபாய் விதம் வட்டி பெற்றதால் தான் வட்டிக்கான ரசீதை கொடுக்கவில்லை. அறிவிப்பு அனுப்பிய பிறகும் கடன் தொகையை வசூல் செய்ய வேண்டி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு தாவா சொத்து மதிப்புடையது என்பதால் அதை அபகரிக்க வேண்டி அதிக வட்டி என்று சொல்லி அறிவிப்பு அனுப்பினேன் என்றால் தவறு. ஒவ்வொரு மாதமும் வாதி கடன் தொகைக்கு வட்டி செலுத்தியுள்ளார். நான்தான் ரசீது கொடுப்பதில்லை என்றால் தவறு. வட்டியை கொடுக்கவில்லை. வாதி தாவா கடன் அசல் தொகை

மற்றும் வட்டி முழுவதும் செலுத்தி விட்டதால் மனுவில் கோரியுள்ளவாறு எந்த தொகையும் வாதி எனக்கு செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றால் தவறு. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN
Date: 2026.02.19 18:19:30 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.